பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 21 புதன்கிழமை | 06.08.2025 | அதிர்வு 05

## இலங்கை வருகின்றார் ஆஸி. ஆளுநர் நாயகம்

### ஜனாதிபதி, பிரதமரைச் சந்திப்பார்



ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜாய் மோஸ்டின் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு 03▶



# செம்மணியில் 141

## நேற்றும் 6 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வின் போது புதிதாக ஆறு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 02▶



# சான்றுப்பொருள்களைப் பார்வையிட 200 இற்கும் மேற்பட்டோர் வருகை

(பிரபாகரன் டிலக்சன்)

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட சான்றுப் பொருள்களைப் பார்வையிடக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என மொத்தமாக 200 இற்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தார்கள்.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட உடைகள் உள்ளிட்ட பிற சான்றுப் பொருள்கள் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியி 03▶



அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகி பதினொரு மாதங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலகட்டத்தில் அவர் சாதித் தவை யாது என்று தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்புகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அநுர குமார வாக்குறுதி அளித்தபடி -

⭑ திருடர்களை மடக்கினாரா?

⭑ வரிச் சுமைகள் குறைக்கப் பட்டனவா?

⭑ சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் மாற்றி அமைக்கப்பட்டதா?

⭑ ஊழல், மோசடி, முறைகேடுகள் ஒழிக்கப்பட்டு, விலைவாசி குறைக்கப்பட்டதா?

⭑அரச சொத்துக்கள் தனியார்மயப்படுத்தப்படும் நடவ 03▶





## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வின் 31ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது. நேற்றைய அகழ்வின் போது ஆறு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட நான்கு மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் 141 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு சுத்தப் படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளிலிருந்து 130 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.












# புலி டயஸ்போராக்களின் கோரிக்கைக்கமையவே அநுரகுமார அரசாங்கத்தால் மஹிந்த இலக்கு!

## இப்படிப் பதறுகின்றது மொட்டுக் கட்சி

"புலி டயஸ்போராக்களின் வேண்டுகோளுக்கமையவே தற்போதைய அரசால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலக்கு வைக்கப்பட்டுள்ளார்."

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய வரப்பிரசாதங்களை இரத்துச் செய்வதற்குரிய சட்டமூலத்தை முன்வைப்பதற்கு அரசு தயாராகி வருகின்றது. இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிப் பதவியை வகிப்பவர்தான் நாட்டின் தலைவர். நாட்டுக்காகப்



பல முடிவுகளை அவர் எடுக்க நேரிடும். தமது எதிர்காலம் குறித்து கருதாது நாட்டுக்காகவே முடிவுகளை எடுக்க நேரிடும். இவ்வாறு எடுக்கப்படும் முடிவுகளால் எதிர்காலத்தில் அவருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். எனவேதான் உலக நாடுகளில்கூட தமது நாட்டின் முன்னாள் தலைவர்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், அரசியல் பழிவாங்கல் மற்றும் குரோத நோக்கு என்பவற்றின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதி பதிகளுக்குரிய வரப்பிரசாதங்களை இல்லாது செய்வதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

புலி டயஸ்போராக்களின் தேவைக்காக, அவர்களின் பழிவாங்கல் நடவடிக்கைக்காக இந்த நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் போர் நிலை ஏற்பட்டால்கூட முதுகெலும்புடன் செயற்படக்கூடிய அரச தலைவர் ஒருவர் உருவாகுவதைத் தடுக்கும் நோக்கமும் இதன் பின்னணியில் உள்ளது." – என்றார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை நிறுத்தப்பட்டதா?

- இப்படிப் பல கேள்விகளை அவர் எழுப்புகின்றார். ஆனாலும் வரவேற்கத்தக்க பதில் எதுவும் கிடைக்கவில்லை.

வாய்ச் சவடால்தான் ஆட்சியில் தொடர்கிறது. செயலில் ஒன்றும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

☆ ☆ ☆

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விலக்கப்பட்டமை தொடர்பான நடவடிக்கையை, நாட்டின் பிரதம நீதியரசராக பிரீதி பத்மன் சூரசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமையையும் தொடர்புபடுத்தி, நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒரு சர்ச்சையை கிள்ளப்பியிருக்கின்றார். அது கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

"2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளுக்கு தேசபந்து தென்னக்கோன் பொறுப்புக்கூற வேண்டும். அதிகாரத்தை அவர் முறையற்ற வகையில் பயன்படுத்தியமையாக் அரசியல்வாதிகளின் வீடுகள் அன்று தீக்கிரையாக்கப்பட்டன.

"பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்கான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் தற்போதைய பிரதம நீதியரசர் பி.பி.சூரசேன தலைமையில் சிறப்புக்குழு நியமிக்கப்பட்டது. இந்த குழுவுக்கு நான் அன்றே எதிர்ப்பு தெரிவித்தேன். தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 09 வழக்குகளை விசாரணை செய்த நீதியரசர் குழாமின் தலைவராக பிரதம நீதியரசர் பி.பி.சூரசேன பதவி வகித்துள்ளார்.

"அத்துடன் தேசபந்து தென்னக்கோனை அடிப்படை உரிமை மீறல் குற்றவாளி என்று குறிப்பிட்டு பிரதம நீதியரசர் தீர்ப்பளித்துள்ளார். இவ்வாறான நிலையில் அவரை குழுவின் தலைவராக நியமித்தமை சிக்கலுக்குரியது என்பதையே நான் சுட்டிக்காட்டினேன்.

"பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி.சூரசேன தலைமையிலான குழு ஜூலை 21 ஆம் திகதி அவர் குற்றவாளி என விதப்புரை அறிக்கை சமர்ப்பித்தது. ஜூலை 22 ஆம் திகதி பிரதம நீதியரசராக பி.பி.சூரசேன ஜனாதிபதியால் நியமிக் கப்பட்டார். இது எவ்வகையில் நியா யமானது?" - என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தயாசிறி ஜயசேகர.

நீதித் துறை தொடர்பில் நியாயமான கேள்வியாகவே இது தெரிகின்றது.

☆ ☆ ☆

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் அறிவித்துள்ளது.

சமந்தா ஜாய் மோஸ்டின் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் அவர் ஈடுபடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டாரகம, மிரிஸ்ஸ மற்றும் வெலிகம ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்திரேலியாவின் ஆதரவுடன் இயங்கும் திட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளார்.

அத்துடன், இந்த விஜயம் இலங்கை – ஆஸ்திரேலிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிகளை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டது என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

### சான்றுப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து பிற்பகல் 5 மணி வரை சித்துப்







பாத்தி இந்து மயானத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 54 சான்றுப்பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் தனிமனிதர்கள் சாராத சான்றுப்பொருள்கள் தவிர்க்கப்பட்டு, தனிமனிதர்களோடு தொடர்புடைய 43 சான்றுப் பொருள்கள் மாத்திரமே காட்சிப்படுத்தப்பட்டன.

சான்றுப்பொருள்களைப் பார்வையிடக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனச் சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தார்கள். எனினும், எதுவிதமான சான்றுப்பொருள்களும் நேற்றைய அடையாளப்படுத்தல் நடவடிக்கையின் போது அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேசபந்து தென்னக்கோனின் நிலை!

இலங்கை பொலிஸ் சேவையில் மிகுந்த சர்ச்சைக்குரியவராக திகழ்ந்த தேசபந்து தென்னக்கோனின் பொலிஸ் துறைப் பதவி நேற்றோடு முடிவுக்கு வந்தது.

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து அவர் நேற்று உத்தியோகபூர்வமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அவரைப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பான குற்ற விசாரணைப் பிரேரணை 177 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டமையை அடுத்து அவர் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து உத்தியோகபூர்வமாக விலக்கப்பட்டார். அந்தப் பிரேரணைக்கு எதிராக - அல்லது தேசபந்து தென்னக்கோனுக்கு ஆதரவாக - நாடாளுமன்றத்தில் எவரும் வாக்களிக்கவில்லை.

சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரியாக திகழ்ந்த தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தெரிவானமை கூட பெரும் சர்ச்சைக்குரியதாகவே இருந்தது.

அவரது பெயரை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த போதிலும், அதனை ஏற்க அப்போதைய அரசமைப்பு கவுன்ஸில் மறுத்துவிட்டது.

ஆயினும் அரசமைப்பு கவுன்ஸிலில் அதன் உறுப்பினர்கள் அளித்த வாக்குகள் தொடர்பில் குழப்பமான அறிக்கை ஒன்றை - அல்லது பிழையான அர்த்தம் தரும் முடிவு ஒன்றை - தயாரித்து, அப்போதைய சபாநாயகர் அவ்வேளையில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமர்ப்பிக்க, அதன் அடிப்படையில் அடுத்த ஓரிரு மணி நேரத்தில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அந்த நியமனத்துக்கு எதிரான வழக்கு இப்போதும் உயர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்திலேயே தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் அவருக்கு எதிரான விசாரணை நடத்தப்பட்டு, விசாரணைக் குழு அவரை குற்றவாளியாகக் கண்டது.

அதன் பின்னர் நேற்று தேசபந்து தென்னக்கோனைப் பதவி விலக்கும் பிரேரணை ஆளும் தரப்பு - எதிர்த் தரப்பு என்று வேறுபாடு இன்றி 177 எம்.பிக்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

நேற்றுடன் பதவியை இழந்திருக்கும் தேசபந்து தென்னக்கோன் இப்போது மேலும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டிருக்கிறார்.

2023 ஆம் ஆண்டில் அறகலய போராட்ட சமயம் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் மீது அலரி மாளிகையில் இருந்து வெளியேறி அணிவகுத்து வந்தோர் தாக்குதல் நடத்தியமையால் கொழும்பு காலி முகத் திடலில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

அச்சமயத்தில் மேற்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோனும் அந்தத் தாக்குதல் சம்பவங்களின் சூத்திரதாரி என்ற முறையில் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட இருக்கின்றது.

இது விடயத்தில் தாம் கைது செய்யப்படலாம் என்று அஞ்சும் தேசபந்து தென்னக்கோன் முற்கூட்டியே பிணை அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்தை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறார். அந்த விவகாரம் - முன்பிணை விண்ணப்பம் - நீதிமன்றத்தில் நேற்று விசாரிக்கப்பட்டு இருக்கின்றது.

நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் பதவி பறிக்கப்பட்ட முதலாவது பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், இப்போது அறகலயப் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விடயத்தில் எச்சமயத்திலும் கைது செய்யப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவே பேசப்படுகிறது.

'விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக' பொலிஸ்மா அதிபர் பதவியை, ஒட்டுமொத்த நாடாளுமன்ற எம்.பிக்களின் ஆதரவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பறிகொடுத்த தேசபந்து தென்னக்கோன் இப்போது கைது செய்யப்படும் ஆபத்தை எதிர்கொண்டு இருக்கிறார்.



# செம்மணியில் மேலும் பல இடங்களில் மனித எச்சங்கள் ஸ்கானில் கண்டறிவு!

யாழ்ப்பாணம் – செம்மணி, சித்துப்பாத்தி மனித புதைகுழி வளாகத்தில் மேலும் பல இடங்களிலும் மனித எச்சங்கள் இருப்பது ஸ்கான் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது.

ஏற்கனவே இரண்டு புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டு அந்த இடங்களில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜீ.பி.ஆர். ரக அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு முன்னதாக பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டது. எனினும் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை.

இதனையடுத்து, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்த ஸ்கான் இயந்திரத்தை பெற்று ஆய்வுப் பணிகள் நடத்தப்பட்டன.

இதன்போதே, பல இடங்களிலும் மனித எச்சங்கள் காணப்படுவதை ஸ்கான் இயந்திரம் அடையாளப் படுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சேந்தாங்குளம் பகுதியில் இரு மீனவரைக் காணோம்

யாழ்ப்பாணம், சேந்தாங்குளம் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற இருவர் காணாமல் போயுள் ளனர்.

40 மற்றும் 50 வயதுடைய இருவர் நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்கு படகு ஒன்றில் சென்றுள்ளனர்.

இவ்வாறு தொழிலுக்கு சென்ற இருவரும் இதுவரை திரும்பி வரவில்லை. காணாமல் போனவர்களை தேடும் நடவடிக்கைகளில் கடற்றொழிலாளர்களும் கடற்படையினரும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் நிலைப்பாடு தடையாக இருக்கலாம்



என்பதே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முக்கிய காரணம்.

உயிர்த்த தாக்குதல்கள் நடந்த நேரத்தில் அருண ஜயசேகர கிழக்கு மாகாணத்தின் தளபதியாக பணியாற்றியமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த உண்மைக்கு மேலதிகமாக, பல காரணிகளின் அடிப்படையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இன்று ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் பிரேரணை வரைவு குறித்து விவாதிக்க உள்ளார்.



# சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் நேற்றுக் கடலுக்குள் பாய்ந்த கார்!

யாழ். நோக்கி நேற்றுச் சென்ற கார் ஒன்று சங்குப்பிட்டி பாலத்திற்கு அண்மையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழில் இருந்து கிளிநொச்சிக்கு சென்று, மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி சென்றபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்தக் காரினுள் மூன்று இளைஞர்கள் இருந்தபோதும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. நீண்ட முயற்சியின் பின்னர் கார் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

# திருமலையில் மரண தண்டனைத் தீர்ப்பு

மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கணவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.என்.எம். அப்துல்லாஹ் நேற்று திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டி தீர்ப்பளித்தார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி கந்தளாய் பகுதியில் தனது மனைவியான முஹம்மது பௌஸ் ரஷ்மியா (29வயது) என்பவரை கூரிய கத்தி கொண்ட ஆயுதத்தினால் திட்டமிட்டு கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கணவனுக்கு எதிராகத் திருகோணமலை நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் கணவரான கந்தளாய்-பேராறு பகுதியில் வசித்து வரும் மங்கு என்று அழைக்கப்படும் சுபியான் இன்சான் (38வயது) என்பவர் இந்தக் கொலையை செய்தார் என வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது.

இந்த வழக்கை அரச சட்டத்தரணி டி தர்ஷிகா நெறிப்படுத்தினார். எதிரிக்கு கொலைக் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்றைய தினம் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் நீதிபதியாக திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றும் சந்தர்ப்பத்தில் வழங்கிய முதல் மரண தண்டனைத் தீர்ப்பு இது எனவும் குறிப்பிடத்தக்கது.

# 3,500க்கும் அதிகமான படை விட்டோடிகள் இந்த வருடத்தில் கைது செய்யப்பட்டனராம்!

முறையான அங்கீகாரம் இல்லாமல் சேவையைவிட்டுவெளியேறியமைக்காக இலங்கை ஆயுதப்படைகளைச் சேர்ந்த 3,500 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 22 முதல் ஒகஸ்ட் 03 வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது, விடுப்பு இல்லாமல் விடுமுறையில் இருந்த 3,504 முப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டனர் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 2,937 பேர் இராணுவத்தினர், 289 பேர் கடற்படையினர் மற்றும் 278 பேர் விமானப்படையினர் ஆவர்.



கடந்த ஆண்டு ஒரு சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டதாகவும், இதனால் அங்கீகரிக்கப்படாத பணியாளர்கள் முறையாக பணிக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர் எனவும் பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டது.

இந்தக் காலகட்டத்தில் திரும்பி வரத் தவறியவர்கள் இந்த ஆண்டு பெப்ரவரி 22 அன்று தொடங்கி கைது நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

# இணைய சூதாட்டம்; 11 இந்தியர்கள் கைது!

தலங்கம, அக்குரேகொட பகுதியில் இணைய சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் கணினிகள் மற்றும் கைபேசிகளைப் பயன்படுத்தி இணைய சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 8 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் உட்பட 11 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 20 கைபேசிகள், 3 மடிக்கணினிகள் மற்றும் ஒரு டெப்லெட் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர்கள் 22, 30 மற்றும் 43 வயதுடையவர்கள் எனவும், ஆண் சந்தேக நபர்கள் 25, 26, 27 மற்றும் 29 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தலங்கம பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தமிழர்கள் - முஸ்லிம்கள் முரண்பாடுகளை வைத்து கிழக்கில் இனிமேலும் அரசியல் செய்ய முயலாதீர்!

## சாணக்கியன் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை



கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வைத்து இரு சமூகங்களுக்கிடையே குழப்பங்களை உருவாக்கும் அரசியல் பாணி இனிமேலும் அனுமதிக்கப்பட முடியாது என்று நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

நேற்றையதினம் நாடாளுமன்ற ஒத்திவைக்கும் பிரேரணை நேரத்தில், பிரதேச செயலகங்களுக்கான எல்லை நிர்ணயத்தைக் கோரி முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம்.ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் தனிநபர் பிரேரணையை முன்வைத்தார்.

அந்தப் பிரேரணை மீது உரையாற்றிய போதே சாணக்கியன் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த விவகாரம் சமூக மட்டத்தில் பிரச்சினையாக மாறியதற்குப் பொறுப்பு தேசிய மக்கள் சக்தியின் ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்களே.

அவர்கள் மூவரும் உண்ணாவிரதம் இருக்கப்போகின்றார்கள் என அறிவித்தார்கள். இது அரசாங்கத்தினுள்ளே இருந்து, அரசாங்கத்தையே எதிர்த்து நடக்கும் ஒரு வகையான ஆர்ப்பாட்டம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் இரு சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சில இடங்களில் முஸ்லிம் காங்கிரஸுடன் ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஒருவரை ஒருவர் எதிர்த்து அரசியல் செய்து வந்தனர். இது இனிமேல் மீண்டும் நடக்கக் கூடாது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக தமிழ் மக்களுக்கும் பிரச்சினை உள்ளது. ஆனால் இதைப்பற்றி பேசும் முஸ்லிம் சகோதரர்கள் அந்த பிரச்சினையை மறுக்கின்றனர். முஸ்லிம் மக்கள் எல்லைப் பிரச்சினையை எழுப்பும் போது, தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும். ஆனால், இந்தமுறையும் உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளனர். அந்த ஒற்றுமை தொடர வேண்டும்.

மேலும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் இதற்கான தீர்வு அமையாது. மக்கள் எதிர்ப்பினால் எந்தவொரு நடவடிக்கையும் பலனளிக்காது. மக்கள் இணைந்து பேசிக் கொண்டு தீர்வைத் தேட வேண்டும். இல்லையெனில், இது இரு சமூகங்களுக்குள்ளும் பெரிய பிரச்சினையாக மாறும்.


நசீர் அஹமட் அமைச்சுப் பதவியுடன் அரசுடன் சேர்ந்தார். ஆனால் தம் சமூகப் பிரச்சினைகளை முன்வைக்காமல், அரச அதிகாரிகளை பயன்படுத்தி வியாபாரம் செய்தார்.

ராஜபக்ஷக்களையும், அதிகாரிகளையும் வைத்து சாதிக்க இயலாமல் போனதா? அவர் உங்கள் கட்சியின் முன்னாள் உறுப்பினர். இன்று அவரை அரச பயங்கரவாதி என அழைக்கிறீர்கள். இதை ஏற்க முடியாது.

அவ்வாறே, ரிஷாட்டும் அமைச்சராக இருந்தார்.. அப்போது இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கலாம். இன்று அரச உத்தியோகத்தர்கள் மீது குற்றச்சாட்டுவது வருத்தமளிக்கின்றது. - என்று தெரிவித்தேன்.

# கரைத்துரைப்பற்றில் இருந்து களவாக அபகரிக்கப்பட்டு வெலிஓயாவுடன் சேர்க்கப்படும் தமிழ் கிராமசேவகர் பிரிவு

## அங்கு பௌத்த வழிபாட்டுக்கும் தொல்லியல் திணைக்களம் அனுமதி







(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து திருட்டுத்தனமாக அபகரிக்கபடும். தமிழ் கிராம சேவகர் பிரிவில் பௌத்த வழிபாட்டை ஆரம்பிக்க தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொக்குத்தொடுவாய் மேற்கு கிராம சேவகர் பிரிவு தற்போது வரை மாவட்ட நிர்வாக வரை படத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழேயே உள்ளது.

ஆனால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கொழும்புத் திணைக்களங்களின் பயன்பாட்டில் கொக்குத்தொடுவாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவு வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் திருட்டுத்தனமாக வரைபடத்தில் சேர்க்கப்படுகின்றது.

இந்த சர்ச்சை உள்ள கொக்குத்தொடுவாய் மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள தொல்லியல் சின்னம் காணப்படும் பகுதியில் ஓர் பௌத்த பிக்குவினால் ஏற்பாடு செய்யப்படும் பௌத்த மத வழிபாட்டை அனுமதிக்குமாறு தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதன் மூலம் கொக்குத்தொடுவாய் மேற்கு தமிழ் கிராம சேவகர் பிரிவு முழுமையாக சிங்கள மயமாக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.



# பாலமுனை திராய்க்கேணியில் தீ மிதிப்பு




(றிபாஸ்)

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலமுனை திராய்க்கேணி கிராமத்தில் அமைந்துள்ள மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு தீமிதிப்பு நிகழ்வுடன் நிறைவு பெற்றது.

வருடாந்த உற்சவ நிகழ்வின் ஆரம்பத்தின் போது பால் கூட பவனி, பறவை காவடி போன்ற பல்வேறு மத நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க தாகும்.







# மட்டக்களப்பில் வாய்ப் புற்றுநோய் பரிசோதனை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் வாய், புற்றுநோய் தொடர்பான பரிசோதனை முகாம், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.முரளிஸ்வரன் தலைமையில் மாவட்ட தொற்றா நோய் தடுப்பு பொறுப்பதிகாரி இ. உதயகுமார் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் நேற்று இடம் பெற்றது.

இலங்கைப் போக்குவரத்து சபை சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு இதன் போது துறைசார் நிபுணர்களினால் வாய் புற்றுநோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

புகைத்தல் மற்று புகையிலை போன்ற பொருள்களை பாவனை செய்வதனால் வாய்ப் புற்றுநோய் தாக்கம் அதிகம் காணப்படுகின்றது.

மாவட்டத்தில் அதிகளவான நபர்கள் புற்று நோயிலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தரவுகள் சுட்டிக்காட்டுவதை முன்னிட்டு புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக பிராந்திய சுகாதார பணிமனையினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது..

இந் நிகழ்வில் முகத்தாடை சத்திர சிகிச்சை நிபுணர் நவினி, பேராசிரியர் கருணாகரன், பிராந்திய பல்வைத்திய பொறறுப்பதிகாரி எஸ். கோகுலரமணன், மட்டக்களப்பு போக்குவரத்து சேவை முகாமையாளர் க.ஸ்ரீதரன் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# ஏழு பேரில் ஒருவருக்கு என்ற ரீதியில் மட்டக்களப்பில் புற்றுநோய்ப் பாதிப்பு

## பேராசிரியர் கருணாகரன் தெரிவிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் புற்று நோய் உருவாகி வருகின்றது. இது ஒரு சமுதாய பிரச்சனையாக இருக்கின்றது என வைத்தியரும், புற்று நோய் தடுப்பு சங்க தலைவரும், மட்டு. மாநகர சபை உறுப்பினருமான பேராசிரியர் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் வாய் புற்று நோயை தடுக்கும் திட்டத்தின் கீழ் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களைப் பரிசோதனை செய்யும் நடமாடும் வைத்திய முகாம் மட்டு. பிராந்திய சுகாதர சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் முரளீஸ்வரன் தலைமையில் மட்டு. மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது அங்கு கலந்துகொண்ட வைத்தியர் கருணாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் வாகன சாரதிகள், நடத்துனர்கள் வெற்றிலை, பாக்கு, புகையிலை, புகைத்தல் போன்றவற்றிற்கு அடிமையாகியுள்ளனர். அவை இல்லாமல் அவர்களது தொழிலை செய்ய முடியாது உள்ளனர். இது எந்தளவுக்கு வாய்புற்று நோயைக் கொண்டு வரும் என்பது எங்களுக்கு தெரியும். இது பெரும் சமூதாய பிரச்சனையாக இருக்கின்றது.

எனவே முதலில் இந்த வாகன சாரதிகள், நடாத்துனர்களை முதலில் பரிசோதித்து, புற்று நோயை இனம் கண்டு, வெற்றிலை, பாக்கு, புகையிலை, புகைத்தல்களை பாவிப்பதால் ஏற்படும் புற்று நோய் தொடர்பாக அவர்களுக்கு தெளிவூட்டல்களை வழங்குவதன் மூலம் இதனைத் தடுக்கமுடியும்.

இந்த வெற்றிலை, பாக்கு புகையிலை, பாவிப்பவர்கள் அதிகரித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு வாய் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இதனால் வாழ்க்கையே கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். – என்றார்.









# மட்டக்களப்பில் காணாமல் போயுள்ள குடும்பஸ்தர் தகவல் தெரிந்தால் தருமாறு பொலிஸார் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு புதூரைச் சோந்த 56 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 26 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயுள்ளார் என உறவினர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் என மட்டு. தலைமையகஓ பொலிஸார் தெரிவித்தனர்

நகரிலுள்ள உணவகத்தில் வேலை செய்து வந்த புதூரைச்சேர்ந்த 56 வயதுடைய கணேஸ் விக்கினேஸ்வரன் கடந்த 19 ஆம் திகதி வழமைபோல வீட்டில் இருந்து உணவகத்திற்கு வேலைக்கு சென்றார். அன்று அவர் வீடு திரும்பாத நிலையில்  அவரை உறவினர்கள் தொடர்பு கொண்ட போது மாமாங்க கோவில் உற்சவத்தையிட்டு அங்கு  தான் வேலை செய்யும் முதலாளி உணவுக் கடை அமைத்துள்ளார் எனவும் தாம் அங்கு நிற்கிறார் என்ச்வும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் கடந்த 26 ஆம் திகதி முதலாளி சம்பளம் தரவில்லை, தந்ததும் வருவார் எனத் தொலைபேசி ஊடாக தெரிவித்துள்ளார். அதன் பின்னர் கோவில் உற்சவம் முடிவுற்ற பின்னர் அவரின் தொலைபேசி செயலிழந்துள்ளது. அவரும் வீடு திரும்பவில்லை. அதையடுத்து அவரை உறவினர்கள் தேடியும் அவரைக் காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்



இந்த புகைப்படத்தில் இருப்பவர் தொடர்பாக தகவல்கள் கிடைத்தால் உடனடியாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பிரேக் திடீரெனச் செயற்படாதமையால் காரை விட்டு வெளியே பாய்ந்த சாரதி!

## குருநாகல் பகுதியில் சம்பவம்

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு அருகில் மோட்டார் கார் விபத்து ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சாரதி வாகனத்தைச் செலுத்திக் கொண்டு இருக்கும் போது வாகனத்தின் பிறேக் திடீரென்று பிடிபடாததன் காரணமாக சாரதி வாகனத்தைவிட்டு வெளியே பாய்ந்துள்ளார்.

வாகனம் அருகில் இருந்த கால்வாயில் விழுந்துள்ளது. இதன் போது வாகனம் பலத்த சேதத்துக்குள்ளானதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.











# உத்தரகாசியில் குடியிருப்புகளை அடித்துச் சென்ற பெருவெள்ளம்

## ஐம்பது பேர் வரைச் சிக்கினர் எனத் தகவல்

உத்தரகண்ட் மாநிலம் உத்தரகாசியில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதில் 50 பேர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உத்தராகண்டின் உத்தரகாசி மாவட்டத்தின் மலைப்பகுதியான தாராலி கிராமத்தில் இன்று மேக வெடிப்பால் ஏற்பட்ட வெள்ளத்தில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

இப்பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மாநில பேரிடர் மீட்புப் படை சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. கீர் கங்கா நதியின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மேக வெடிப்பால் மிகப் பெரிய வெள்ளம் ஏற்பட்டது.

இது குறித்து உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கூறுகையில்- "தாராலி (உத்தரகாசி) பகுதியில் மேக வெடிப்பு காரணமாக ஏற்பட்ட பெரும் இழப்புகள் குறித்த செய்தி மிகவும் வருத்தமாகவும் வேதனையாகவும் உள்ளன. தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, மாவட்ட நிர்வாகக் குழுக்கள் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக மூத்த அதிகாரிகளுடன் நான் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன், நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. அனைவரின் பாதுகாப்புக்காக நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்." என்று கூறினார்.

இதுகுறித்து இந்திய இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் -

"ஹர்சிலுக்கு அருகிலுள்ள கீர் காட் பகுதியில் தாராலி கிராமத்தில் ஒரு பெரிய மண்சரிவு ஏற்பட்டது, இதனால் குடியிருப்பு வழியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஐபெக்ஸ் படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டுள்ளனர். சேதத்தின் அளவு கண்டறியப்பட்டு வருகிறது. இந்த இயற்கை பேரிடரின் போது மக்களுக்கு ஆதரவாக இராணுவம் உறுதியாக நிற்கும்" என்று தெரிவித்தது.

இந்த நிலையில், இடிபாடுகளுக்குள் சுமார் 10-12 பேர் புதைந்திருக்கலாம் என்று கிராமவாசி ராஜேஷ் பன்வார் தெரிவித்தார். 20-25 ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.





# ஹவுதி கிளர்ச்சியாளர் தாக்குதலில் இருந்து எங்கள் நாட்டு மக்களை மீட்டது இந்தியா

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு



ஹவுதி கிளர்ச்சியாளர் தாக்குதலின்போது பிலிப்பைன்ஸ் நாட்டினரை மீட்பதில் முதலில் களமிறங்கியது இந்தியாதான் என்றும் அதை தங்கள் நாடு அங்கீகரிப்பதாகவும் அந்நாட்டின் ஜனாதிபதி ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர் தெரிவித்துள்ளார்.

5 நாள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றுள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர், பிரதமர் நரேந்திர மோடியை ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இதையடுத்து, இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஃபெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர் தெரிவிக்கையில்,

"கடந்த 2024 இல் ஹவுதி கிளர்ச்சியாளர் தாக்குதலில் இருந்து பிலிப்பைன்ஸ் நாட்டினரை மீட்பதில் முதலில் களமிறங்கிய நாடு இந்தியா. அதற்காக இந்திய அரசுக்கும் இந்திய கடற்படைக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். இந்தியாவுக்கு இருக்கும் செல்வாக்கை பிலிப்பைன்ஸ் அங்கீகரிக்கிறது. மேலும், இந்தோ - பசுபிக் பிராந்தியம் அச்சுறுத்தல் அற்றதாக இருப்பதை உறுதிப்படுத்த இந்தியாவுடன் இணைந்து பணியாற்றி நாங்கள் விரும்புகிறோம்.

இந்தியர்கள் விசா இன்றி பிலிப்பைன்ஸ் வருவதற்கான சலுகைகளை நாங்கள் அறிவிக்கிறோம். இந்திய சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் பிலிப்பைன்ஸ் வருமாறு அழைப்பு விடுக்கிறேன். பிலிப்பைன்ஸ் நாட்டினர், விசா இன்றி இந்தியா வருவதற்கான சலுகையை பிரதமர் மோடி அறிமுகப்படுத்தியதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அக்டோபர் முதல் நேரடி விமானச் சேவை தொடங்கப்பட உள்ளது. இதை வரவேற்பதோடு, விமான சேவையை விரிவுபடுத்தவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

இந்தியா - பிலிப்பைன்ஸ் இடையே தூதரக ரீதியிலான உறவு என்பது முறையாக தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவு புதிய சகாப்தத்தில் நுழைகிறது. பிலிப்பைன்ஸைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான முடிவு. ஏனெனில், இதுபோன்ற கூட்டாண்மை உறவை ஏற்படுத்திக்கொள்வதில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம். இந்தியா, பிலிப்பைன்ஸின் 5-வது கூட்டாண்மை நாடாக மாறுகிறது.

இரு நாடுகளுக்கு இடையேயான 75 ஆண்டுகால உறவின் விரைவான, ஆழமான வளர்ச்சி இரு பொருளாதாரங்களுக்கும் மிகப் பெரிய பலன்களை அளிக்கும். பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்." என தெரிவித்தார்.

# த.வெ.க. மாநாடு திகதி மாற்றம்: புதிய திகதி அறிவித்தார் விஜய்




தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு ஓகஸ்ட் 25 நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது புதிய திகதியை அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மாற்றத்தை நோக்கிய தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், தமிழக வெற்றிக் கழகம் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு வீறுகொண்டு வெற்றிநடைபோட்டு வருவதை அனைவரும் அறிவீர்கள். இந்தப் பயணத்தின் அடுத்த கட்டமாகக் கழகத்தின் மாநில மாநாடு, ஓகஸ்டு 2 5ஆம் திகதி மதுரையில் நடைபெறும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன்.

ஆனால், மாநாடு முடிந்த ஒருநாள் இடைவெளியில் விநாயகர் சதுர்த்தி விழா வருவதால், பொலிஸ் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதோடு அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட வேண்டியிருக்கிறது என்றும், எனவே மாநாட்டிற்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவதற்கு ஏதுவாக 18.08.2025 முதல் 22.08.2025 வரை ஏதேனும் ஒரு தேதியில் மாநாட்டை நடத்தும்படியும் பொலிஸ் கேட்டுக்கொண்டது. அதன் பேரில், கழகத்தின் மாநில மாநாடு முன்கூட்டியே நடத்தப்பட உள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில மாநாடு, ஓகஸ்டு 21ஆம் திகதி வியாழக்கிழமை அன்று. மாலை 4.00 மணி அளவில் ஏற்கெனவே அறிவித்த அதே மதுரை மாநகரில் அதே பிரம்மாண்டத்தோடும் கூடுதல் உற்சாகத்தோடும் நடைபெற உள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இதற்கான பணிகள், ஏற்கெனவே சிறப்பான முறையில் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், அந்தப் பணிகள் தற்போது மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனவே கழகத் தோழர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி மதுரையில் நடைபெற உள்ள கழகத்தின் மாநில மாநாட்டிற்கு மிகவும் பொறுப்புடனும் பாதுகாப்புடனும் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# அடுத்த 24 மணி நேரத்தில் இந்தியா மீது கூடுதல் வரி

## ட்ரம்ப் அறிவிப்பு

அடுத்த 24 மணி நேரத்தில் இந்தியா மீதான வரியை கணிசமாக உயர்த்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து பேட்டி ஒன்றில் பேசிய ட்ரம்ப், "இந்தியா ஒரு நல்ல வர்த்தக கூட்டாளியாக இல்லை, ஏனென்றால் அவர்கள் எங்களுடன் நிறைய வணிகம் செய்கிறார்கள், ஆனால் நாங்கள் அவர்களுடன் வணிகம் செய்வதில்லை.

எனவே நாங்கள் 25 சதவீத வரி விதிக்க முடிவு செய்தோம். ஆனால் அடுத்த 24 மணி நேரத்தில் நான் அதை கணிசமாக உயர்த்தப் போகிறேன் என்று நினைக்கிறேன், காரணம், அவர்கள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குகிறார்கள். உக்ரைன் மீதான தாக்குதலுக்கான எரிபொருளை அவர்கள் ஊக்குவிக்கின்றனர்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை 30 அன்று, டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருள்க ளுக்கு 25 சதவீத வரியை அறிவித்தார். மேலும் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் ஆயுதங்கள் வாங்கினால் கூடுதல் வரி விதிக்கப்படும் எனவும் எச்சரித்தார். ரஷ்யா உக்ரைனுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதைத் தொடரும் நாடுகளுக்கு 100 வீத வரை கூடுதல் வரிகளை விதிப்பது குறித்து பரிசீலிப்பதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார்.

# இந்தியாவுக்கு வர்த்தக அழுத்தம் கொடுக்கும் அமெரிக்காவுக்கு ரஷ்ய அரசு கடும் எதிர்ப்பு

இந்தியாவுக்கு அமெரிக்கா கொடுக்கும் வர்த்தக அழுத்தத்தை சட்டப்பூர்வமானது என தாங்கள் கருதவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா, உக்ரைன் இடையே மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இந்த போர் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது. இதன் காரணமாக, தான் சந்திக்கும் பொருளாதார இழப்புகளை ஈடுகட்டும் நோக்கில் தன்னிடம் உள்ள கச்சா எண்ணெயை ரஷ்யா குறைந்த விலைக்கு விற்கிறது.

ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகளிடம் கூடுதல் கச்சா எண்ணெயை வாங்கி வருவதால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கிலும், உள்நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. தற்போது இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 40 சதவீதத்தை ரஷ்யா பூர்த்தி செய்து





வருகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய பொருள்களுக்கான வரியை 25 வீதமாக உயர்த்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்தால் இந்தியாவுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அண்மையில் எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ்,

"ரஷ்யா உடனான வர்த்தக உறவுகளைத் துண்டிக்க பல நாடுகளை அமெரிக்கா கட்டாயப்படுத்துகிறது என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மையில் அச்சுறுத்தல்களை அமெரிக்கா வழங்குகிறது. அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகள் சட்டப்பூர்வமானவை என நாங்கள் கருதவில்லை. இறையாண்மை கொண்ட நாடுகளுக்கு தங்கள் வர்த்தக கூட்டாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 7 ஆம் திகதிக்குள் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ட்ரம்ப் கெடு விதித்துள்ளார். எனினும், போர் குறித்த தங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் -06.08.2025




இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வாரத்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்பப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக உணர்வீர்கள். நீங்கள் திடகாத்திரமாக இருப்பதாக உணர்வீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது

# இன்றைய ராசி பலன்கள் -06.08.2025




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.




இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்று பக்குவமாகவும் புத்திசாலித்தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். செரிமானம் சம்பந்தமான பிரச்சனை உங்களை பாதிக்கும்.




இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# இந்தியத் தூதுவர் சந்தோஷுடன் பிரதி அமைச்சர் பிரதீப் சந்திப்பு

## மலையகத்துக்கான உதவிகள் தொடர்பில் கலந்துரையாடல்




இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் பெருந்தோட்டம் , சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்புக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதன்போது மலையக மக்களுக்கான உதவித் திட்டங்களை ஒரு மாவட்டத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் மலையக மக்கள் செறிந்து வாழும் 12 மாவட்டங்களுக்கும் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசு இதுவரையில் இலங்கைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற உதவிகளுக்கும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்த பிரதிய அமைச்சர் பிரதீப், கடந்த காலங்களிலும் அவ்வாறே, நிகழ்காலத்திலும் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் பெருமனம் கொண்டு வாழ்த்துவதாக இந்தியத் தூதுவரிடம் தெரிவித்தார்.

இதன்போது தமது அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் இந்தியத் தூதுவரிடம் பிரதி அமைச்சர் பிரதீப் விரிவாக எடுத்துரைத்தார். அதில் விசேடமாக விஞ்ஞான, தொழிநுட்ப வினைத்திறன் பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், மலையகப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வசதியளிக்கக்கூடிய ஓய்வறைகளை நிர்மாணித்தல், பாடசாலைகளுக்கான கற்றல், கற்பித்தல் விஞ்ஞான உபகரண சாதனங்கள் மற்றும் மாணவர்களின் திறன் அபிவிருத்தி உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற சுமார் 10 இற்கும் மேற்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் காத்திரமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மலையக மக்கள் செறிந்து வாழும் 12 மாவட்டங்களுக்கும் முன்னுரிமைப்படுத்தி இந்த வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சரின் ஆலோசகரும் பிரத்தியேக செயலாளருமான கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம், ஒருங்கிணைப்புச் செயலாளர்களான வசந்த மூர்த்தி, சிவனேசன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.